கனம் தலைமை குற்றவியல் நடுவர் / சிறப்பு நீதிபதி, இராமநாதபுரம் அவர்கள் முன்பாக

**Under Section 173 BNSS**

30/07/24

DEPUTY SUPDT. OF POLICE
VIGILANCE AND ANTI-CORRUPTION
RAMANATHAPURAM.

**TAMIL NADU POLICE**
INTEGRATED INVESTIGATION FORM-I

# FIRST INFORMATION REPORT
## முதல் தகவல் அறிக்கை
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

C 8167239

1. District : இராமநாதபுரம் மாவட்டம் | PS: ஊ.த.க பிரிவு காவல்நிலையம் | Year: ஆண்டு | FIR No.: 17/2024 மு.த.அ. எண் | Date: 30.07.2... நாள்

2. (i) Act சட்டம்: PC Amendment Act 2018 | Sections பிரிவுகள்: 7(a) of PC Amend... Act 2018
   (ii) Act சட்டம்: | Sections பிரிவுகள்:
   (iii) Act சட்டம்: | Sections பிரிவுகள்:
   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் | Date from : நாள் முதல் 29.07.2024 | Date to : நாள் வரை 30.07.2024 - காலை சு... 10 மணியளவில்
   Time Period : நேர அளவு | Time from : நேரம் முதல் | Time to : நேரம் வரை
   (b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 30.07.2024 | Time : நேரம் 13.00 மணி
   (c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் தொகுதி-II | Time : நேரம்

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக எழுத்து மூலமாக

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் சுமார் 55 கி.மீ தென் மேற்...
   Beat Number : முறைக் காவல் எண் | (b) Address : முகவரி மின் உதவி பொறியாளர் அலுவலகம், கடலா...
   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் | District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையிட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் க. இராஜாரதன் | (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் கருப்பையா
   (c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 32/2024 | (d) Nationality : நாட்டினம் இந்தியன் | (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
   Date of Issue : வழங்கப்பட்ட நாள் | Place of Issue : வழங்கப்பட்ட இடம்
   (f) Occupation : தொழில் பெயிண்டர் | (g) Address : முகவரி 4/108-B, சமத்துவபுரம், கடலாடி கடலாடி தாலுகா, இராமநாதபுரம் மாவட்டம்

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
   தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
   1. கணேசன், உதவி மின் பொறியாளர், கடலாடி மின் பகிர்மானம்;
   2. முத்துவேல், மின் வணிக உதவியாளர், மின் உதவி பொறியாளர் அலுவலகம், கடலாடி.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
   குற்றமுறையிட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

   — தாமதம் ஏதுமில்லை —

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு —

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் —

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்) —

சமர்ப்பிக்கிறேன் : N.ராஜேஸ்வரி, காவல் ஆய்வாளர், ஊழல் தடுப்பு மற்றும் கணகாணிப்புப்பிரிவு, இராமநாதபுரம் மாவட்டம் ஆகிய நான் இன்று 30.07.2024ம் தேதி அலுவலில் இருநதபோது வாதி கொடுதத புகார மனுவை 13.00 மணிக்கு பெற்று புகார்தாரர மற்றும் எதிரி திரு.கணேசன் மற்றும் திரு.முததுவேல் ஆகியோர்களது முன நடத்தை குறித்து இரகசிய விசாரணை மேற்கொண்டும் புகார் குறித்த விபரஙகளை ஊழல் தடுப்பு மற்றும் கணகாணிப்புத்துறை தென சரக காவல் கணகாணிப்பாளரிடம் தகவல் தெரிவித்து அனுமதி பெற்று இராமநாதபுரம் ஊ.த.க.பிரிவு குற்ற எண் 17/2024 u/s 7 (a) of Prevention of Corruption Act, 1988 as amended in 2018னபடி இன்று 30.07.2024ம் தேதி 13.15 மணிக்கு வழககு பதிவு செய்தேன். புகார் பின்வருமாறு. அனுப்புநர் க.இராஜநாதன், வயது 32/2024, த/பெ கருப்பையா, 4/108 B சமத்துவபுரம், கடலாடி, கடலாடி தாலுகா,

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ...................... Rank ...................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ............................ பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ........................................ காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

K.Rajanathan.

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

Name: பெயர் N. RAJESWARI
Rank: நிலை ........No. எண் .........

30.07.2024 - 13.45 மணி

<u>இராமநாதபுரம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப்பிரிவு குற்ற எண் 17/2024 u/s 7 (a) of Prevention of Corruption Act, 1988 as amended in 2018 வழக்கின் தொடர்ச்சி</u>

இராமநாதபுரம் மாவட்டம். பெறுநர் உயர் திரு. காவல் ஆய்வாளர் அவர்கள், லஞ்ச ஒழிப்புத்துறை, இராமநாதபுரம். அய்யா, நான் மேலே கண்ட முகவரியில் எனது குடும்பத்துடன் வசித்து வருகிறேன். நான் பெயிண்டிங் வேலை செய்து வருகிறேன். நான் வசிக்கும் சமத்துவபுரத்திற்கு எதிரில் உள்ள சர்வே நம்பர் 256 உட்பிரிவு 1ஏ 1 பி ல் அமைந்துள்ள அய்யனராஜ் என்பவரின் 7 செண்ட் இடத்தை கிரைய விலைக்கு வாங்கினேன். பின்னர் மேற்படி இடத்தை பத்திரபதிவு செய்வதில் உள்ள சிக்கல் ஏற்பட்டதால் அதனை பின்னர் நிவர்த்தி செய்து தருகிறேன் இப்போதைக்கு அந்த இடத்தில் குடியேறும் படி கூறியதால் பத்திரப்பதிவு செய்யாமல் தனிப்பட்ட முறையில் கிரையத்திற்கு வாங்கிய மேற்படி இடத்தில் ஆஸ்பெஸ்டாஸ் வீட்டை கட்டி எனது பெயரில் ஒரு சொத்து வரி ரசீது பெற்று குடியிருந்து வந்தேன். இந்நிலையில் மேற்படி எனது வீட்டிற்கு மின் இணைப்பு பெற விண்ணப்பித்த போது எனது பெயரில் பத்திரப்பதிவு செய்யாததால் மேற்படி மின்இணைப்பு கிடைக்கவில்லை எனவே எனது வீட்டை இரண்டு பாகமாக பிரித்து அய்யனராஜ் பெயரில் ஒரு சொத்து வரி ரசீது பெற்று அவருடைய சம்மதத்துடன் மீண்டும் மேற்படி அய்யன் ராஜ் பெயரில் உள்ள வீட்டிற்கு மின் இணைப்பு வேண்டி கடந்த 04.07.2024 ஆம் தேதி விண்ணப்பித்தேன். பின்னர் கடலாடி மின்பகிர்மான உதவிப்பொறியாளர் அலுவலகத்திற்கு நேரில் சென்று அங்கிருந்த மின்வணிக ஆய்வாளர் திரு. முத்துவேல் அவர்களை சந்தித்து எனது வீட்டிற்கான மின்இணைப்பு தொடர்பான ஆவணங்களை கொடுத்தேன். அதன்பிறகு சுமார் 10 நாட்கள் கழித்து மேற்படி அலுவலகத்தில் பணிபுரியும் உதவிப்பொறியாளர் கணேசன் மற்றும் வணிக ஆய்வாளர் முத்துவேல் ஆகியோர்கள் எனது வீட்டிற்கு வந்து ஆய்வு செய்த போது இருவரும் என்னை தனியாக அழைத்து மின்மீட்டர் மற்றும் தனியாக மின்கம்பம் போடுவதற்கு மதிப்பீடு தயார் செய்ய நாங்கள் சொல்லும் பணத்தை தயார் செய்து

வைத்துக்கொள்ளுங்கள் என்றும் இப்போதைக்கு நாங்கள் ஆய்வுக்கு வந்ததற்கு ரூ.2,000/- கொடுங்க எனக்கேட்டார்கள். நான் அதற்கு என்னிடம் பணம் இல்லை என்று மறுத்துவிட்டேன். அதனைததொடர்ந்து சில நாட்கள் கழிதது நான மீண்டும் அவ்வலுகத்திற்கு சென்று மின்இணைப்பு பெற விண்ணப்பம் கொடுதத விபரம் கேட்க, பணம் கொடுக்காமல் வேலை நடக்காது என இருவரும் கூறினார்கள். மீண்டும் நான் நேற்று 29.07.2024ஆம் தேதி கடலாடி மின்பகிர்மான உதவிப்பொறியாளர் அலுவலகத்திற்கு நேரில் சென்று அங்கிருநத உதவிப்பொறியாளர கணேசனை சந்தித்த போது நான் ஏற்கனவே மின வணிக ஆய்வாளர் முத்துவேலிடம் விபரத்தை சொல்லிட்டேன அவரையே பாருங்க எனக்கூறினார். முத்துவேல் அங்கு இல்லாததால் இன்று 30.07.2024 ஆம் தேதி காலை சுமார் 10.00 மணியளவில் மேற்படி அலுவலகத்திற்கு சென்று எனது மின்இணைப்பு பற்றி வணிக ஆய்வாளர் முத்துவேல் என்பவரிடம் கேட்க, என்னிடம் இப்போதைக்கு புது மின் மீட்டருக்கென ரூ.7,000/-மும் எங்களது அலுவலக செலவிற்கென தனியாக ரூ.5,000/- கொடுங்க எனவும் அதனபிறகு தான் மின்கம்பம் அமைப்பதற்கான எஸ்டிமேட் போட்டு உங்கள் வேலையை முடித்து கொடுக்க முடியும் எனக்கூறினார். நானும் என்னிடம் அவ்வளவு பணம் இல்லை என்று கூறினேன். அதற்கு அவர், புது மின் மீட்டருக்கென ரூ.7,000/- தொகையை தனியாக ஆன்லைனில் கட்டிங்கோங்க. இப்போதைக்கு எங்களுக்கு அலுவலக செலவிற்கென தனியாக கொடுக்க வேண்டிய ரூ.5,000/-பணத்தை கொடுங்க எனக்கூறினார. அதற்கு நான், என்னால் அவ்வளவு பணம் கொடுக்க முடியாது என சொன்னதற்கு, ஏடி உட்பட அனைதது அதிகாரிகளுக்கும் பணம் கொடுக்க வேண்டியிருக்கும் அதனால ரூ.4,000/- மாவது கொடுங்க என கராராக கூறினார். அப்போது அங்கிருந்த உதவிபொறியாளரும் என்னிடம் கொஞ்சம் பாத்து பன்னுங்க என்று சொல்ல நானும் வேறுவழியில்லாமல் சரிபாரப்போம என சொல்லவே மினவணிக ஆய்வாளர முத்துவேல் மேற்படி பணததை அவ்வலுகத்தில் தற்காலிகமாக பணிபுரியும் இராமர என்பவரிடம் கொடுத்துடுங்க நான் அவரிடமிருந்து வாங்கிக் கொள்கிறேன் எனக்கூறினார். நான் யோசித்து

பார்த்து அரசு பணியை செய்வதற்காக என்னிடம் பணம் கேட்ட கடலாடி மின்வாரிய அலுவலக உதவி பொறியாளர் கணேசன் மற்றும் மின் வணிக உதவியாளர் முத்துவேல் என்பவர் மீது புகார் செய்ய முடிவு செய்தேன். ஆகவே, என்னிடம் லஞ்சப்பணம் கேட்ட கடலாடி மின்வாரிய அலுவலக உதவிப்பொறியாளர் கணேசன் மற்றும் மின் வணிக உதவியாளர் முத்துவேல் என்பவர் மீது தக்க நடவடிக்கை எடுக்குமாறு மிகத் தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறேன். இப்படிக்கு ஒப்பம் (க.இராஜநாதன்) 30.07.2024 Sir, Received the complaint on 30/07/2024 at 13.00 hrs and Enquired the character and Anticedence of the complainant Rajanathan and Accuseds Ganesan and Muthuvel and registered a case in Ramanathapuram V&AC Crime No.17/2024 u/s 7 (a) of PC (Amendment) Act, 2018 at 13.15 hrs. (Sd) N.Rajeswari, Inspector of Police, V&AC, Ramnad 30/07/2024. இதன் முதல் தகவல் அறிக்கை அசலை வாதியின் புகாருடன் இணைத்து கனம் முதன்மை குற்றவியல் நடுவர் நீதிபதி/சிறபபு நீதிபதி, இராமநாதபுரம் அவர்களுக்கும், இதர நகல்களை சம்மந்தப்பட்ட உயர் அதிகாரிகளுக்கும் அனுப்பி வைத்தேன்.

காவல் ஆய்வாளர்
ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப் பிரிவு,
இராமநாதபுரம்.